1. மேற்குத் தொடர்ச்சி மலை சுற்றுச்சூழல் குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட கமிட்டி :
   (A) பலராமன் கமிட்டி (B) நரசிங்கம் கமிட்டி
   (C) ஜயகுமார் கமிட்டி (D) காட்கில் கமிட்டி

2. இப்போதைய ரிசர்வ் பேங்க் கவர்னர் :
   (A) சுப்பாராவு (B) ரங்கராஜன்
   (C) அலுவாலியா (D) ரகுராம் ராஜன்

3. மத்திய திட்டக் கமிஷன் செயர்மேன் யார்?
   (A) மன்மோகன் சிங் (B) மொண்டேக் சிங் அலுவாலியா
   (C) பி. சிதம்பரம் (D) கபில் சிபல்

4. இப்போது நடைமுறையில் இருப்பது எத்தனையாவது லோக் சபை?
   (A) 13 (B) 12 (C) 11 (D) 15

5. இந்திய திரைப்படத்தின் எத்தனையாவது ஆண்டு 2013 -ல் கொண்டாடப்பட்டது?
   (A) 50 (B) 75 (C) 100 (D) 150

6. புதிதாக உருவாக்கப்பட்ட தெலுங்கானாவின் தலைநகரம் எது?
   (A) செங்கந்தராபாத் (B) ஹைதராபாத்
   (C) விசாகப்பட்டினம் (D) விஜயவாடா

7. கீழ்வருபவர்களில் 2013 -ல் அர்ஜுன் விருது பெற்ற கிரிக்கெட் வீரர் யார்?
   (A) சச்சின் டெண்டுல்கர் (B) விராட் கோஹ்லி
   (C) எம்.எஸ்.தோனி (D) சௌரவ் காங்குலி

8. 2014 - ல் இந்திய நேஷனல் விளையாட்டு எங்கு நடைபெற உள்ளது?
   (A) கர்நாடகம் (B) சென்னை (C) கல்கத்தா (D) திருவனந்தபுரம்

9. ஜூன் 19, 2013 -ல் இந்திய அரசு அறிவித்த உத்தராகண்ட் நிவாரண நிதி எத்தனை கோடி?
   (A) 1100 (B) 700 (C) 1000 (D) 900

10. மிகக் கடைசியாக ஸ்ரீஹரிக்கோட்டையிலிருந்து செலுத்தப்பட்ட நாவிகேஷன் செயற்கைக்கோள் எது?

(A) PSLV C - 22 (B) GSLV - 14 (C) PSLV C - 21 (D) PSLV C - 10

11. நமது விண்வெளியின் எந்த அடுக்கில் ஓஸோன் படலத்தின் 90% அடங்கியுள்ளது?

(A) அயணோஸ்பியர் (B) குரோமோஸ்பியர்
(C) கொரோணா (D) ஸ்ட்ராட்டோஸ்பியர்

12. சிறுநீரின் (Urine) மஞ்சள் நிறத்திற்கான காரணம்

(A) பைல் (B) யூரோக்கோம் (C) லிம்ப் (D) கொளஸ்ட்ரோல்

13. நர்மதை, தப்தி நதிகள் எந்தக் கடலில் சென்று சேருகிறது?

(A) இந்திய மகா சமுத்திரம் (B) அரபிக்கடல்
(C) காம்பா கடலிடுக்கு (D) வங்காள விரிகுடா

14. "பிக் ரெட்" என அறியப்படும் பாலைவனம் எது?

(A) ஸஹாரா (B) அட்டாக்காமா (C) ஸிம்ஸன் (D) ஸலார்

15. 2013 கணக்குப்படி இந்தியாவில் வேலை இல்லாமையின் விகிதம் :

(A) 4.6 (B) 4.5 (C) 3.8 (D) 4.3

16. வயதுக்கு வந்த ஒரு மனிதனின் உடம்பில் ஓடும் இரத்தத்தின் அளவு எவ்வளவு?

(A) 5 லிட்டர் (B) 4.8 லிட்டர் (C) 5.2 லிட்டர் (D) 6.3 லிட்டர்

17. வேளாண்மை துறையில் 'நீலப் புரட்சி' எந்த உற்பத்திப் பெருக்கத்துடன் தொடர்புடையது?

(A) முட்டை (B) வேதி உரங்கள் (C) மீன் (D) காய்கறி

18. முதல் அணுகுண்டில் பயன்படுத்தப்பட்ட நியூக்ளியர் எரிபொருள் எது?

(A) யுரேனியம் - 235 (B) யுரேனியம் - 238
(C) கிரிப்டோன் - 96 (D) கிரிப்டோன் - 97

19. பூமியிலிருந்து ஒரு பொருளின் 'எஸ்கேப் வெலாஸிற்றி' எவ்வளவு?

(A) 11.2 km/s (B) 13.1 km/s (C) 11.4 km/s (D) 10.2 km/s

20. இந்தியாவில் மிக அதிக வனப்பகுதி உள்ளது எங்கே?

(A) தமிழ்நாடு
(B) மகாராஷ்டிரம்
(C) பீஹார்
(D) மத்தியப் பிரதேசம்

21. கேரளத்தின் மிகப்பெரிய காயல் (கழி) :

(A) வேம்நாட்டுக் காயல்
(B) சாஸ்தாம் கோட்டைக் காயல்
(C) பீயாம் காயல்
(D) அஷ்டமுடிக் காயல்

22. கேரளம் வழியாகச் செல்லும் மிகவும் நீளம் கூடிய தேசிய பாதை

(A) என்.எச். 47 (B) என்.எச்.22 (C) என்.எச்.10 (D) என்.எச்.17

23. குலசேகர அரசர்களின் ஒரு பரம்பரை A.D. 800 முதல் A.D. 1124 வரை கேரளத்தை ஆண்டிருந்தது. அவர்களின் தலைநகரமாக இருந்தது எது?

(A) போள நாடு (B) ஓட நாடு (C) மகோதயபுரம் (D) வேணாடு

24. படிக மணலின் டெப்பாஸிட் எந்தப் பகுதிகளில் அதிகமாக உள்ளது?

(A) மேப்பாடி வைத்திரிப் பகுதிகள்
(B) ஆலப்புழை சேர்த்தலைப் பகுதிகள்
(C) திருவனந்தபுரம் கொல்லம் மாவட்டங்கள்
(D) சவறை நீண்டகரைப் பகுதிகள்

25. கேரளத்தின் முதல் நீர்மின் திட்டம்

(A) பள்ளி வாசல் (B) மூழியார் (C) இடுக்கி (D) குற்றியாடி

26. இந்தியாவின் மிக உயரமான சிகரம் Mt. K2 அதாவது காட்வின் ஆஸ்டின் ஆகும். இந்தச் சிகரத்தின் உயரம் எவ்வளவு?

(A) 8666 (B) 8660 (C) 8664 (D) 8661

27. இந்தியாவின் மானக ரேகாம்ஸம் எது?

(A) 82°35′ மேற்கு (B) 82°30′ கிழக்கு (C) 82°30′ வடக்கு (D) 82°30′ தெற்கு

28. தாமோதர் நதித்தடத் திட்டத்தின் பயனாளிகள் எந்தெந்த மாநிலங்கள்?

(A) கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம்

(B) மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான்

(C) ஒரீஸா, பீகார்

(D) ஜார்கண்ட், மேற்கு வங்காளம்

29. டாட்டா அயண் அன்ட் ஸ்டீல் கம்பெனி (TISCO) ஜாம்ஷெட்பூரில் எப்போது நிறுவப்பட்டது?

(A) 1905 -ல் (B) 1959 -ல் (C) 1907 -ல் (D) 1923 -ல்

30. குளிர்ந்த பாலைவனம் என அறியப்படும் பகுதி எது?

(A) லடாக்

(B) அருணாச்சலப் பிரதேசம்

(C) ஜம்மு காஷ்மீர்

(D) ராஜஸ்தான்

31. லட்சதீவின் தலைநகரம் :

(A) அகத்தி (B) கவரத்தி (C) கடமத்து (D) செத்திலத்து

32. இந்திய அரசியல் சட்டத்தின் எந்த ஆர்ட்டிக்கிள்படி தீண்டாமை இல்லாமல் செய்யப்பட்டது?

(A) ஆர்ட்டிக்கிள் 22

(B) ஆர்ட்டிக்கிள் 21

(C) ஆர்ட்டிக்கிள் 17

(D) ஆர்ட்டிக்கிள் 24

33. இந்தியாவின் முக்கிய எண்ணெய்ச் சுரங்கம் எங்கு உள்ளது?

(A) மும்பை ஹை (B) கல்கத்தா (C) குஜராத் (D) கோவா

34. முதல் ஐந்தாண்டுத் திட்டம் எதற்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்தது?

(A) வேளாண்மை, தொழிற்சாலை

(B) தொழில் முன்னேற்றம்

(C) வறுமை ஒழிப்பு

(D) வேளாண்மை, நீர்ப்பாசனம்

35. இந்தியாவின் மைய வங்கி (Bank) :
(A) ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா
(B) ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியா
(C) ஸ்டேட் பேங்க் ஆஃப் டிராவன்கூர்
(D) சவுத் இந்தியன் பேங்க்

36. திட்டக் கமிஷனின் முதல் தலைவர் :
(A) வல்லபாய் பட்டேல்
(B) டாக்டர் ராஜேந்திர பிரசாத்
(C) காந்திஜி
(D) ஜவஹர்லால் நேரு

37. "சுதந்திரம் அடிமட்டத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு கிராமமும் பூரண அதிகாரமுள்ள ஒவ்வொரு ரிப்பப்ளிக் அல்லது பஞ்சாயத்து ஆகவேண்டும்" எனக் கூறியவர் யார்?
(A) ஜவஹர்லால் நேரு
(B) டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்
(C) காந்திஜி
(D) டாக்டர் ராஜேந்திர பிரசாத்

38. இந்தியாவில் மனித உரிமை பாதுகாப்புச் சட்டம் எப்போது நடைமுறைக்கு வந்தது?
(A) 1948 (B) 1993 (C) 1989 (D) 1979

39. மனித உரிமைகளில் முக்கியமானதும் அடிப்படையானதுமான உரிமை எது?
(A) வாக்குரிமை
(B) சொத்துரிமை
(C) சமத்துவத்திற்கான உரிமை
(D) வாழ்வுரிமை

40. தகவல் தொழில்நுட்பச் சட்டம் நிறைவேறியது எப்போது?
(A) 2000 (B) 2001 (C) 1999 (D) 2003

41. பெண்களின் பிரச்சினைகளுக்குச் சட்டப்பூர்வமான தீர்வு உறுதி செய்யும் சட்டம் எது?
(A) வரதட்சிணை தடுப்புச் சட்டம்
(B) குடும்ப வழக்கிற்கு எதிரான பாதுகாப்புச் சட்டம்
(C) ஒருங்கிணைந்த சட்டம்
(D) ரேகிங் தடைச் சட்டம்

42. தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது எப்போது?
(A) 2002 (B) 2009 (C) 2005 (D) 2008

43. இந்தியாவின் வானம்பாடி என அறியப்படும் விடுதலைப் போராட்ட வீராங்கனை
   (A) ஆனி பெஸன்ட்
   (B) சரோஜினி நாயுடு
   (C) மேடம் காமா
   (D) இந்திரா காந்தி

44. 'இந்தியா இந்தியருக்கே' என்னும் முத்திரை வாக்கியத்தை முதன்முதலாக முழக்கியவர் யார்?
   (A) தாதாபாய் நவரோஜி
   (B) சுவாமி விவேகானந்தன்
   (C) சுவாமி தயானந்த சரஸ்வதி
   (D) மகாதேவ கோவிந்த ரானடே

45. இந்தியாவில் காந்திஜியின் முதல் சத்தியாக்கிரகம்
   (A) சாந்தாள் கலவரம்
   (B) சம்பாரன்
   (C) பார்தோளி போராட்டம்
   (D) அகமதாபாத் மில் வேலை நிறுத்தம்

46. "வெளிநாட்டுக் காரியங்கள் உள்நாட்டுக் காரியங்களைப் பின் தொடரும்" - பிரதமர் ஜவஹர்லால் நேரு இவ்வாறு கூறியது எங்கே?
   (A) 1955 -ல் லோக் சபையில்
   (B) 1977 -ல் அமைச்சரவையில்
   (C) 1961 -ல் கோவா விடுதலைப் போராட்ட நேரத்தில்
   (D) 1957 -ல் லோக் சபையில்

47. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் அடித்தளம் எது?
   (A) பஞ்சசீல தத்துவங்கள்
   (B) குடியரசு
   (C) மதச் சார்பின்மை
   (D) அணிசேராக் கொள்கை

48. 1985 -ல் வட்டாரக் கூட்டுறவுக்கான தென்னாசிய அமைப்பு உருவானது. இதற்காக முன்கை எடுத்த நாடு எது?
   (A) இலங்கை
   (B) இந்தியா
   (C) அமெரிக்கா
   (D) சீனா

49. "இல்லாமலாகிக் கொண்டிருக்கும் பேங்கில் இருந்துள்ள காலாவதியான செக்" என்று காந்திஜி எதைக் குறிப்பிட்டார்?
   (A) ஹோம் ரூல் இயக்கம்
   (B) சைமன் கமிஷன்
   (C) ஹிலாபத் இயக்கம்
   (D) கிரிப்ஸ் மிஷன்

50. பூதான இயக்கத்திற்கு தொடக்கம் குறித்தவர் யார்?
   (A) ஆச்சாரிய வினோபா பாவே
   (B) தாதாபாய் நவரோஜி
   (C) ஹோமி ஜெ.பாபா
   (D) சர்தார் வல்லபாய் பட்டேல்

51. Find the synonym of the word 'Manifest'.

(A) Custom (B) Display (C) Humble (D) Soft

52. The antonym of 'adapt' is ________.

(A) Hate (B) Retreat (C) Misfit (D) Native

53. Add a prefix to get the opposite meaning of the word 'Grace'.

(A) Ungrace (B) Disgrace (C) Misgrace (D) Ingrace

54. The meaning of the underlined idiom is ________.

"Everything was <u>at sixes and sevens</u> when I entered the house".

(A) Comfortable (B) Surprise (C) Arranged (D) Confusion

55. ________ is the word which means 'Natural ability'.

(A) Flare (B) Fare (C) Flair (D) Fair

56. A place where birds are kept is called ________.

(A) Zoo (B) Aviary (C) Orchard (D) Aquarium

57. The plural of calf is ________.

(A) Calf (B) Calve (C) Calves (D) Cow

58. The word with the correct spelling is ________.

(A) Dictionary (B) Dictionery (C) Dictionairy (D) Dectionery

59. Replace the word in bold letters with the right phrase given below.

"I cannot **Recollect** that incident".

(A) Call off (B) Call for (C) Call up (D) Call in

60. Pick out the singular form from the given words.

(A) Dishes (B) Batches (C) Class (D) Mice

61. "Help me to do this work" is an example of :

(A) Declarative sentence (B) Interrogative sentence

(C) Imperative sentence (D) Exclamatory sentence

62. The passive form of "The secretary garlanded the chief guest" is ________.
(A) The chief guest was garlanded by the secretary.
(B) The chief guest is garlanded by the secretary.
(C) The chief guest has been garlanded by the secretary.
(D) The chief guest will be garlanded the secretary.

63. Beggar said to Ramu, "Give some water". The reported form of the above sentence is ________.
(A) Beggar asked Ramu water.
(B) Beggar requested Ramu to give some water.
(C) Beggar wanted Ramu to give water.
(D) Beggar ordered Ramu to give water.

64. Rewrite the sentence using the correct article.
I shall finish my work in ________ hour.
(A) an (B) the (C) a (D) to

65. അദ്ധ്വാനിക്കാതെ നേട്ടമില്ല എന്നർത്ഥം വരുന്ന ഒരു പഴഞ്ചൊല്ല്.
(A) No pain, no gain.
(B) He that seeketh, findeth.
(C) Experience is the best teacher.
(D) Little knowledge is a dangerous thing.

66. Use the appropriate question tag for the sentence given below.
They live in the town, ________ ?
(A) didn't us (B) don't they (C) do they (D) did they

67. There was a big crowd ________ the market.
Use the correct preposition.
(A) on (B) at (C) in (D) with

68. This is the ________ news.
Use the correct adjective.
(A) late (B) early (C) last (D) latest

69. The word which means 'innocent' is :
(A) Childish (B) Frank (C) Childlike (D) Proud

70. Pick out the correct sentence.
(A) I am superior than him.
(B) I am superior than he.
(C) I am superior to him.
(D) I am more superior to him.

71. ஐவகை நிலங்களில் உள்ள 'முல்லை' யின் நிலப்பிரிவு எது?

(A) மலையும் மலை சார்ந்த இடமும்

(B) காடும் காடு சார்ந்த இடமும்

(C) வயலும் வயல் சார்ந்த இடமும்

(D) கடலும் கடல் சார்ந்த இடமும்

72. வருக, வருக - இலக்கணக் குறிப்பு தருக?

(A) இரட்டைக்கிளவி (B) அடுக்குத்தொடர்

(C) வினைத்தொகை (D) வினைச்சொல்

73. கயிறு + பாலம் : இணைத்து எழுது

(A) கயிறுபாலம் (B) கயிறுப்பாலம்

(C) கயிற்றுப்பாலம் (D) கயிர்பாலம்

74. 'தாமரை' என்ற பொருளைத் தரும் சொல் எது?

(A) ஆழி (B) ஞாலம் (C) கமலம் (D) புனல்

75. ஒரே தொடர் மடங்கி வந்து இரு வேறு பொருளைத் தரும் அணி எது?

(A) சிலேடை அணி (B) உருவக அணி

(C) மடக்கணி (D) வேற்றுமை அணி

76. கேரளக் கலைகளில் ஒன்று எது?

(A) தெருக்கூத்து (B) குச்சிப்புடி (C) பரதநாட்டியம் (D) ஓட்டன்துள்ளல்

77. 'கவிமணி' என்று அழைக்கப்படுபவர் யார்?

(A) பாரதியார் (B) தேசிய விநாயகம் பிள்ளை

(C) கம்பர் (D) பாரதிதாசன்

78. சீவக சிந்தாமணியை இயற்றியவர் யார்?

(A) திருத்தக்கத் தேவர் (B) மாணிக்கவாசகர்

(C) இளங்கோவடிகள் (D) திருநாவுக்கரசர்

79. Teaching is an art

(A) கற்றல் ஒரு கலை

(B) கற்பித்தல் ஒரு கலை

(C) கற்றுக்கொள்ளுதல் ஒரு கலை

(D) கற்றுக்கொடுப்பது மிகப்பெரிய கலை

80. Unity is strength - இணையான தமிழ் பழமொழி எது?

(A) பல துள்ளி பெரு வெள்ளம்

(B) பேராசை பெரு நஷ்டம்

(C) பதறாத காரியம் சிதறாது

(D) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

81. ஒரு மொழியில் COCHIN என்னும் சொல் BNBGHM என எழுதப்படுகிறது என்றால் அந்த மொழியில் THRISSUR என்பது எவ்வாறு எழுதப்படும்?

(A) SGQHRRTQ (B) UGSHTTVSC (C) SGQHRRTS (D) PGRHQQAR

82. கீழ்வரும் வரிசையில் அடுத்த எண் எது?

3, 12, 30, 66, ________

(A) 264 (B) 90 (C) 138 (D) 300

83. தனித்து நிற்பது எது?

8, 27, 64, 100, 125, 216, 343

(A) 27 (B) 100 (C) 125 (D) 343

84. கீழ்வரும் சொற்களை ஆங்கில எழுத்து வரிசைப்படி வரிசைப்படுத்தினால் மூன்றாவது சொல் எதுவாக இருக்கும்?

JUVENILE, JOURNEY, JUDGE, JUSTICE, JUDICIAL

(A) JUDICIAL (B) JUDGE (C) JUSTICE (D) JUVENILE

85. A -க்கு ஒரு வேலையை 15 நாட்களிலும், B -க்கு அதே வேலையை 20 நாட்களிலும் செய்ய முடியுமென்றால் இவர்கள் சேர்ந்து 4 நாட்கள் வேலை செய்தால் மீதி வரும் வேலையைக் குறிப்பிடும் பின்ன எண் எது?

(A) $\frac{1}{4}$ (B) $\frac{1}{10}$ (C) $\frac{7}{15}$ (D) $\frac{8}{15}$

86. ஒரு கார் முதல் இரண்டு மணி நேரத்தில் 30 km/hr என்ற வேகத்திலும் அதன் பிறகு 40 km/hr என்ற வேகத்தில் அடுத்த இரண்டு மணி நேரமும் பயணம் செய்தால் அந்தக் கார் பயணம் செய்த மொத்த தூரம் எவ்வளவு?

(A) 70 (B) 100 (C) 140 (D) 343

87. 'Odometer' பயணம் செய்யும் தூரத்துடன் தொடர்புடையது என்பதுபோல 'Compass' எதனுடன் தொடர்பு கொண்டுள்ளது?

(A) நேரம் (B) திசை (C) வேகம் (D) செயல்

88. ஒரு கடிகாரத்தில் நேரம் 11 : 30 ஆகும்போது அதன் சின்ன முள்ளுக்கும் பெரிய முள்ளுக்கும் இடையே (முள்ளுகள் நீங்கும் திசை) உள்ள கோண அளவு எத்தனை?

(A) 165° (B) 190° (C) 160° (D) 195°

89. (1) A, B, C, D, E, F என்னும் ஆறு உறுப்பினர்கள் உள்ள குடும்பத்தில் 2 ஜோடி தம்பதியினர் உள்ளனர் :

(2) D, A-யின் பாட்டியும் B-யின் அம்மாவும் ஆகும்.

(3) C, B-யின் மனைவியும் F-ன் அம்மாவும் ஆகும்

(4) F, E-யின் மகளின் மகளாவாள்.

அப்படியானால் C, A-யின் யார்?

(A) அப்பா (B) அம்மா (C) பாட்டி (D) மகள்

90. ஒருவர் 5 km தென் திசையில் நடந்தபின் வலப்பக்கம் திரும்பி 3 km நடந்தபின் அவர் இடப்பக்கம் திரும்பினார். பின்னர் 5 km பயணம் செய்தார். பயணம் தொடங்கிய இடத்திலிருந்து அவர் இப்போது பயணம் செய்யும் திசை எது?

(A) மேற்கு (B) வடக்கு-கிழக்கு

(C) தெற்கு (D) தெற்கு-மேற்கு

91. ஒரு நகரத்தில் வீடுகளுக்கு 46 முதல் 150 வரையிலான இரட்டை எண்கள் கொடுக்கப்பட்டன. அப்படியானால் அந்த நகரத்தில் வீடுகளின் எண்ணிக்கை எத்தனை?

(A) 75 (B) 52 (C) 53 (D) 105

92. பத்து எண்கள் இறங்கு வரிசையில் எழுதப்பட்டுள்ளன. அவற்றின் சராசரி 45. அதில் முதல் நான்கு எண்களின் சராசரி 40 உம் கடைசி நான்கு எண்களின் சராசரி 50-உம் ஆகும். நடுவிலுள்ள இரண்டு எண்கள் சமமானால், நடுவிலுள்ள அந்த எண் எது?

(A) 45 (B) 42.5 (C) 47.5 (D) 46

93. 2014 பிப்ரவரி 1 சனிக்கிழமை என்றால் மார்ச் 1 என்ன கிழமை?

(A) ஞாயிறு (B) திங்கள் (C) சனி (D) வெள்ளி

94. ஒரு வட்டத் தூணின் விட்டம் 4 cm. உயரம் 10 cm. அப்படியானால் அதன் பருமனளவு எவ்வளவு?

(A) $160\ \pi cm^3$ (B) $40\ \pi cm^3$ (C) $40\ cm^3$ (D) $160\ cm^3$

95. $\frac{50\times 13+50}{46+24}$ - ன் மதிப்பு என்ன?

(A) 65 (B) 10.5 (C) 45 (D) 10

96. ரவி கிருஷி செய்வதற்காக 10,000 ரூபாய் கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் வாங்கினார். வட்டி விகிதம் 8%. அப்படியானால் 6 மாதம் கழிந்து அவர் எத்தனை ரூபாய் திருப்பிக் கட்ட வேண்டும்?

(A) 1400 (B) 400 (C) 10,400 (D) 4,800

97. 0.125 என்பதன் பின்ன எண் எது?

(A) $\frac{125}{100}$ (B) $\frac{5}{40}$ (C) $\frac{125}{1000}$ (D) $\frac{1}{8}$

98. 60-ன் 15%ம் 80-ன் 45%ம் கூட்டினால் கிடைக்கும் எண் எது?

(A) 27 (B) 45 (C) 39 (D) 48

99. $4^4=256$ ஆனால் $\sqrt[4]{256}=4$ அதுபோல் $7^4=2401$ ஆனால் $\sqrt[4]{2401}$ - ன் மதிப்பு என்ன?

(A) 7 (B) 4 (C) 2401 (D) $4^7$

100. ஒரு இணையான எண் வரிசையில் (Arithmatic Progression) இரண்டாவதும் நான்காவதும் எண்கள் 8, 2 என்பனவாகும். அப்படியானால் முதல் எண் எது?

(A) 10 (B) 14 (C) 11 (D) 5

-o0o-